# DIOCESAN CIRCULAR LETTERS

No.C.10/2023 07.07.2023

**அன்பிற்கினிய உடன் அருள்பணியாளர்களே, பாசமிகு இறைமக்களே!**

இறைவேண்டலுடன் உங்கள் நலம் நாடி வாழ்த்துகிறேன்!

நமது இந்திய திருநாட்டின் அழகியல்களில் ஒன்றான பன்முகத்தன்மையும், ஆன்மாவாகத் திகழ்கின்ற அரசியலமைப்புச் சட்டமும் அனைத்து சமய மக்களும் அவரவர் சமயக் கொள்கைக் கோட்பாடுகளைப் பின்பற்றி வாழ்வதற்கும் வழிபாட்டு சுதந்திரம் கிடைப்பதற்கும் சமய நம்பிக்கையை அறிவிப்பதற்குமான உரிமைகளை வகுத்தளிக்கின்றன என்பதை நாம் அறிவோம். தற்போது நடைமுறையில் உள்ள குற்றவியல் சட்டங்களும், தண்டனைச் சட்டங்களும் அனைவருக்கும் பொதுவானவை என்பதும் நாம் அனைவரும் நன்கு அறிந்ததே. ஆனால், உரிமையியல் சட்டங்கள் எனப்படும் சிவில் சட்டங்கள் மட்டும் சாதி, மத, இன ரீதியாகப் பண்பாட்டிற்கேற்ப, திருமணம், விவாகரத்து, வாரிசு, தத்தெடுப்பு ஆகியனவைத் தொடர்பாக வெவ்வெறு சட்டங்களைப் பின்பற்றி வருவதை தங்களது கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

ஆனால், தற்போதுள்ள ஒன்றிய அரசு மக்களாட்சிக்கும், பன்முகத்தன்மைக்கும், அரசியலமைப்புச் சட்டத்திற்கும் ஊறுவிளைவிக்கும் விதமாக பொதுசிவில் சட்டத்தைக் கொண்டு இறுதி முயற்சியாக ஜூலை 14, 2023 வரை பொதுமக்களிடம் கருத்துக் கேட்பு முறையை அறிவிப்புச் செய்துள்ளது.

ஆகவே, சமயச் சிறுபான்மையினராகிய நாம், இந்திய அரசியலமைப்புச் சட்டம் நமக்கு வழங்குகின்ற உரிமையைத் தக்கவைக்கவும், நாட்டின் பன்மைத்துவத்தைப் பாதுகாக்கவும், இந்தக் கருத்துக்கேட்பு நடைமுறையைப் பயன்படுத்தி பொதுசிவில் சட்டம் அவசியமில்லை என்பதை உடனடியாக அன்பியங்கள், பிற இயக்கங்கள் வாயிலாக நமது எதிர்ப்பைப் பதிவு செய்ய membersecretary-lci@gov.in என்ற மின்னஞ்சல் வழியாகவும், தவிர கீழ்க்காணும் முகவரிக்குத் தபால் மூலமாகவும் அனுப்பவும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**முகவரி :** உறுப்பினர் செயலர்
இந்திய சட்ட ஆணையம்,
4வது தளம்,
லோக் நாயக் பவன்,
கான் மார்க்கெட்,
புதுடெல்லி – 110 003.

**Address :** Shri Member Secretary,
Law Commission of India,
4th Floor,
LOK Nayak Bhawan,
Khan Market,
New Delhi – 110 003.

நமது உரிமை மீட்கும் பணியில் இறை அருள் உடனிருப்பதாக!

கிறிஸ்துவின் மனநிலையில்

Sd/-

**+ ஆயர் நசரேன் சூசை**